**C.O.S.No.5/2023** தேதி – 19.08.2025

**வா.சா.1– கண்ணன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

10.12.2018 ம் தேதி பர்ச்சேஸ் ஆர்டர் மூலம் சப்ளை செய்யப்பட்ட பொருள் 431 கிலோ ரிசெக்ட் செய்யப்பட்ட அதே தரம்தான் 08.07.2019 ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் மூலம் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. 20721 கிலோ சப்ளை செய்யப்பட்டதில் 431 கிலோ மட்டுமே ரிசெக்ட் செய்யப்பட்டது. 08.07.2019 ல் கொடுக்கப்பட்ட பிலிம் பொருளுக்கும், 10.12.2018 ல் கொடுக்கப்பட்ட பிலிம் பொருளுக்கும் தரம் ஒன்றாகத்தான் இருக்கும் என்றால் சரியல்ல. 08.07.2019 ல் அனுப்பப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டருடன் ரெஸ்ட் ரிப்போர்ட் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி டெஸ்ட் ரிப்போர்ட் எங்களது கம்பெனியில் உள்ளது. அதை நாங்கள் தாக்கல் செய்கிறோம். 10.12.2018 ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் பால் பாக்கெட்டுக்காக கொடுக்கப்பட்ட பர்ச்சேஸ் ஆர்தான் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி கம்பெனி 2018 க்கு 2 வருடங்களுக்கு முன்பிருந்து பால் பாக்கெட்டுக்காக மட்டுமே பிலிம் வாங்கிறார்கள் என்றால் சரிதான். பால் பாக்கெட்டுக்கு பிலிம் ஆர்டர் செய்யும் போது ஒரு தரத்தில்தான் ஆர்டர் செய்வார்கள் என்றால் சரிதான். அவர்களுடைய Specification ஒரே மாதிரித்தான் இருக்கும். 08.07.2019 ல் கொடுக்கப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டர் மூலம் கொடுக்கப்பட்ட பிலிமிக்கும் 10.12.2018 ல் கொடுக்க்பட்ட பர்ச்சேஸ் ஆர்டர் மூலம் கொடுக்கப்பட்ட பிலிமிக்கும் தரம் ஒன்றாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். 10.12.2018 ல் கொடுக்கப்பட்ட அதே தரத்தில்தான் 08.07.2019 ல் கொடுக்கப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டரிலும் கொடுத்தோம் என்றால் சரிதான். 10.12.2018 ல் கொடுக்கப்பட்டுள்ள பர்ச்சேஸ் ஆர்டரில் கொடுக்கப்பட்ட பிலிம் ஆனது தரம் சரியில்லாத காரணத்தால்தான் நிராகரிக்கப்பட்டது. 10.12.2018 ல் கொடுக்கப்பட்ட நிராகரிக்கப்பட்ட பிலிமிக்கு எங்கள் கம்பெனியில் இருந்து டெபிட் நோட் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 10.12.2018 ல் பகுதியாக நிராகரிக்கப்பட்ட பிலிமிக்கு டெபிட் நோட் கொடுக்கப்பட்டு அதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்றால் சரிதான். 10.12.2018 ல் 431 கிலோ தரம் குறைவானது என்று ஒத்துக்கொண்டுதான் நாங்கள் டெபிட் நோட்

கொடுத்தோம் என்றால் மொத்தம் 20721 கிலோவில் 431 கிலோவிற்கு மட்டும் டெபிட் நோட் கொடுத்துள்ளோம். 10.12.2018 ல் தரம் குறைவானது என நிராகரித்த பிறகும் வாதி கம்பெனியில் இருந்து தரத்தை உயர்த்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைஎ என்றால் அதற்கு பிறகு எங்கள் கம்பெனியில் இருந்து 4 பர்ச்சேஸ் ஆர்டர் மூலம் பொருட்கள் கொடுத்துள்ளோம். 10.12.2018 க்கு பிறகு 4 பர்ச்சேஸ் ஆர்டர் மூலம் பொருட்கள் சப்ளை செய்வதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஸ்டேட்மெண்ட் கொடுத்துள்ளோம். 10.12.2018 லிருந்து 09.07.2019 வரை வேறு எதுவும் பர்ச்சேஸ் ஆர்டர் எதுவும் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 10.12.2018 லிருந்து 09.07.2019 வரை உள்ள கால கட்டத்தில் 4 பர்ச்சேஸ் ஆர்டர் மூலம் பொருட்கள் சப்ளை செய்து அதற்கு 1ம் பிரதிவாதி கம்பெனியிலிருந்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என நான் கூறியுள்ள விபரத்தை பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10.12.2018 ல் தரம் குறைவான பொருள்கள் கொடுக்கப்பட்ட அதே போல்தான் 09.07.2019 ம் தேதியிலும் தரம் குறைவான பொருட்களே கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 10.12.2018 ல் தரம் குறைவு என்று புகாரும் வந்த பிறகும் 09.07.2019 ல் கொடுக்கப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டரிலும் அதே தரம் குறைந்த Specification மூலம் பொருட்கள் சப்ளை செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரிதிவாதி கம்பெனி பிலிம் ஆர்டர் கொடுத்தபிறகு அந்த பொருள் 1ம் பிரதிவாதியின் கம்பெனிக்கு சப்ளை செய்த பிறகு மேற்படி பொருளை 1ம் பிரதிவாதி கம்பெனியால் ஆய்வு செய்த பிறகே பயன்படுத்த வேண்டும் என ஒப்பந்தம் உள்ளது. மேற்படி ஒப்பந்தமானது எழுத்து பூர்வமான ஒப்பந்தம் எதுவும் கிடையாது. 1ம் பிரதிவாதி கம்பெனி ஆய்வு செய்து அறிக்கை எதுவும் எங்களுக்கு அனுப்பவேண்டிய தேவை இல்லை என்றால் சரிதான். வாதிக்கும், 1ம் பிரதிவாதி கம்பெனிக்கும் பொருட்களை ஆய்வு செய்த பிறகே பயன்படுத்த வேண்டும் என்பதற்கு ஒப்பந்தம் இருப்பதாக நான் சொல்லியுள்ள விபரத்தை நான் பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். அதுபோல் எந்தவித ஒப்பந்தமும் கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம்

என்றால் சரியல்ல. எங்களிடம் பொருட்கள் வாங்கும்போது, 1ம் பிரதிவாதி கம்பெனியின் இயந்திரங்கள் எந்த வேகத்தில் இயங்க வேண்டும் என வாதி கம்பெனி 1ம் பிரதிவாதி சொல்வது வழக்கமா என்றால் அவ்வாறு பொதுவாக வழக்கமில்லை. பிரதிவாதி கேட்டால் நாங்கள் சொல்வோம். 2017 ல் இருந்து இயந்திரங்களின் தரத்தை உயர்த்தினால் 1ம் பிரதிவாதி கம்பெனி வாதி கம்பெனிக்கு தெரிவிக்க வேண்டும் என ஒப்பந்தம் எதுவும் கிடையாது. ஆனால் தெரிவித்திருந்தால் இந்த பிரச்சனை வந்திருக்காது. 2019 ல் கொடுக்கப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டர் கொடுக்கும்போது, 1ம் பிரதிவாதி கம்பெனியின் இயந்திரங்களின் தரத்தை உயர்த்தியதன காரணமாக நாங்கள் சப்ளை செய்த பிலிமில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். தரம் குறைவான இயந்திரத்திலேயே எங்களது பிலிம் செயல்படுமா என்றால் சரியல்ல. 2019 ல் இயந்திரங்களின் தரத்தை உயர்த்தியதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கம்பெனி இயந்திரங்களின் தரத்தை எப்போது உயர்த்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 2019 ஆகஸ்ட் மாதம் நான் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு செல்லும்போதுதான் இயந்திரங்களின் தரத்தை உயர்த்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரிய வந்தது. ஆகஸ்ட் 2019 ல் நான் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு சென்ற போது அந்த வாரத்தில்தான் இயந்திரத்தின் தரத்தை உயர்த்தியதாக கூறினார்கள். 10.12.2018 ல் அனுப்பப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டரின்போது 1ம் பிரதிவாதி கம்பெனியின் இயந்திரங்கள் பழைய தரத்திலேயே இருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கம்பெனியில் இயந்திரங்களின் தரம் பழைய நிலையில் இருக்கும்போதும் நாங்கள் கொடுத்த பிலிமில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இயந்திரங்களின் தரத்திற்கும், நாங்கள் கொடுக்கப்பட்ட பிலிமிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**